## பதிவுத் துறையில் ரூ.72 ஆயிரத்து 4 கோடி – வணிக வரித் துறையில் ரூ. 5 லட்சத்து 80 ஆயிரம் கோடி வருவாய்!

# முதல்வர் ஆட்சியில் வணிக வரி - பதிவுத் துறை வரலாற்றுச் சாதனை!

## சட்டப் பேரவையில் – மானியக் கோரிக்கை பதிலுரையில் அமைச்சர் பி.மூர்த்தி பெருமிதம்!

**சென்னை, ஏப். 25 -**

**கடந்த 10 ஆண்டு கால அ.தி.மு.க. ஆட்சிக் காலத்தில் வணிக வரித் துறை மொத்தமாக ஈட்டியுள்ள வரி வருவாய் 6 லட்சத்து 87 ஆயிரம் கோடி ரூபாய்! ஆனால் முதலமைச்சர் அவர்கள் தலைமையிலான கழக அரசு பொறுப்பேற்ற பின்னர் கடந்த 4 ஆண்டுகளில் மட்டும் இதுவரை 5 லட்சத்து 80 ஆயிரம் கோடி ரூபாய் வருவாயை வணிக வரித் துறை ஈட்டியுள்ளது.**

**கடந்த ஆட்சியில் 10 ஆண்டு காலத்தில் ஈட்டப்பட்ட மொத்த வரி வருவாயில் 74 சதவிகித வருவாயை கடந்த 4 ஆண்டுகளில் கழக அரசு வசூல் செய்து சாதனை படைத்துள்ளது. மீதமுள்ள வருவாய் இடைவெளியை பூர்த்தி செய்யும் வகையில் வணிகவரித் துறை பல்வேறு நடவடிக்கைகளை முனைப்புடன் முன்னெடுத்துள்ளது. அதே போன்று பதிவுத் துறையில் கடந்த 10 ஆண்டு கால அதிமுக ஆட்சிக் காலத்தில் ஈட்டப்பட்ட மொத்த வருவாய் 88 ஆயிரத்து 844 கோடி ரூபாய் ஆகும். ஆனால் இந்த 4 ஆண்டு கால கழக ஆட்சியில் மட்டும் இதுவரை 72 ஆயிரத்து 4 கோடி ரூபாய் வருவாய் ஈட்டியுள்ளது. கடந்த 10 ஆண்டு கால அதிமுக ஆட்சியில் பதிவுத் துறையில் ஈட்டப்பட்ட மொத்த வருவாயை விட கழக ஆட்சியின் 5 ஆண்டு காலத்தில் கூடுதலாக வருவாய் ஈட்டுவதற்கு பதிவுத் துறையானது பல்வேறு சீர்திருத்த நடவடிக்கைகளை சிறப்பான முறையில் மேற்கொண்டு வருகிறது என்று சட்டப்பேரவையில் பத்திரப் பதிவுத் துறை மற்றும் வணிக வரித் துறை ஆகிய மானியக் கோரிக்கைகள் மீதான விவாதத்தில் கலந்துகொண்டு பேசிய அமைச்சர் பி.மூர்த்தி குறிப்பிட்டார்.**

சட்டப்பேரவையில் - அமைச்சர் பி.மூர்த்தி அளித்த பதிலுரை வருமாறு:-

தமிழின காவலராக வாழ்ந்து, முத்தமிழ் வித்தகராய், அறிஞராய் திகழ்ந்து மக்கள் அன்போடும், ஆதரவோடும் முடிசூடி ஐந்து முறை முதல்

## வணிக வரித் துறையும் – பதிவுத் துறையும் இனி வரும் காலங்களில் முந்தைய ஆண்டுகளை விட கூடுதல் வருவாயைப் பெற்றுத் தரும்!

வராக அமர்ந்து முதல்முறையாக குளித்தலையில் நிற்கத் துவங்கி, இறுதியில் திருவாரூர் வரை போட்டியிட்ட அனைத்துத் தேர்தல்களிலும் வெற்றி மட்டுமே கண்டவர் என்ற பெருமையோடு (மேசையைத் தட்டும் ஒலி) தமிழ்நாட்டை ஆண்டபோது மக்களுக்கு நலத் திட்டங்கள் பல தந்த தலைவர் கலைஞர் அவர்களை இந்த இனிய நேரத்தில் வணங்குகிறேன்.

வாக்குகளைக் கருதி திட்டங்கள் தருவோர் மத்தியில் மக்கள் வாழ்க்கையை மேம்படுத்தத் திட்டங்களைத் தந்து இந்தியாவிற்கே வழிகாட்டும் முதலமைச்சராக திகழ்ந்து மாநில உரிமைகளை காத்திட ஓங்கிக் குரல் கொடுத்து தன் ஆளுமைத் திறனால் அகிலமே அதிசயிக்கும் வண்ணம் நல்லாட்சி நல்கி வருகிறார் நமது முதலமைச்சர் அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

இந்தியாவின் எட்டுத் திக்கும் இருக்கும் மாநிலங்களும் வியக்கும் வண்ணம் சமூகநீதி காவலராக இருந்து மகளிர், மாணவர், தொழிலாளர், விவசாயி என அனைத்துத் தரப்பு மக்களும் பயனடையும் வகையில் பல திட்டங்கள் தருவதால் இந்தியாவிலுள்ள அனைத்து முதலமைச்சர்களில் முன்னோடியாக முதலமைச்சராக இன்றைக்கு விளங்குபவர் தமிழ்நாடு முதலமைச்சர் என்று பத்திரிக்கைகள் பாராட்டும் வகையில் மக்கள் விரும்பும், மக்களுக்கான ஆட்சி தரும், தமிழினத்தின் பெருமை, தமிழர்களின் அருமை, ஏழாவது முறையும் கழக ஆட்சியின் முதலமைச்சராக அமர இருக்கும் முதலமைச்சர் அவர்களுக்கு எனது பணிவான வணக்கங்களை தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இளைஞர்களின் நம்பிக்கையாம், தமிழ்நாட்டின் இளைய வேந்தராம், எழுச்சிமிகு எண்ணங்களின் பெட்டகமாம், கோடான கோடி கழகத்தினரின் காவலராம், தனக்கென வாழாது தமிழ் மக்களின் நலத்திற்கென நாளெல்லாம் உழைத்திடும் நல்மனம் கொண்டவராம்! முதலமைச்சர் தரும் திட்டங்களை முனைப்போடு செயல்படுத்தும் நம்முடைய சீரிய பண்பாளராம், விளையாட்டுத் துறைக்கு அமைச்சராகப் பொறுப்பேற்ற பின்பு எத்தனையோ வீரர்கள், வீராங்கனைகளை அடையாளம் கண்டு, ஏழ்மை அவர்களின் திறமைக்கு என்றும் தடையாக இருக்கக் கூடாது என்று, விளையாட்டு உபகரணங்களை வழங்கி, போட்டிகளில் கலந்து கொள்ள நிதியுதவியும் செய்து, சர்வதேசப் போட்டிகளில் தமிழ்நாட்டின் விளையாட்டு வீரர்கள், வீராங்கனைகள் வெற்றி பெறும் வண்ணம் உற்சாகப்படுத்தி உத்வேகமூட்டி அள்ளிதரும் வள்ளல், ஆற்றல்மிக்க சின்னவர், அருந்தமிழ் வல்லவர், அப்பழுக்கற்ற நல்லவர், என்றென்றும் நம்மவர், துணை முதலமைச்சர் அவர்களுக்கும் என் வணக்கங்களைத் தெரிவித்து கொள்கிறேன்.

பேரவைத் தலைவராக மட்டுமல்ல இந்த அவைக்கு ஆசானாக விளங்கும் பேரவைத் தலைவர் அவர்களுக்கும், அவை முன்னவர் உள்ளிட்ட அமைச்சர் பெருமக்கள், கூட்டணி கட்சித் தலைவர்கள் மற்றும் அனைத்து சட்டமன்ற உறுப்பினர்களுக்கும், எனக்கு வாக்களித்து வெற்றி பெறச் செய்த மதுரை கிழக்குத் தொகுதி, மக்களுக்கும் எனது அன்பார்ந்த வணக்கத்தை தெரிவித்து எனது பதிலுரையைத் தொடங்குகிறேன்.

பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக வரலாற்றில் புதிய சாதனை படைத்து வரும் வணிக வரி மற்றும் பதிவுத் துறை குறித்த மானியக் கோரிக்கை மீதான விவாதத்திற்கு பதில் அளிப்பதில் மகிழ்ச்சி அடைகிறேன்.

மாநில அரசின் வரி வருவாயில் வணிக வரித் துறையின் மூலமாக 71.6 சதவிகிதமும், பதிவுத் துறை மூலமாக 15.4 சதவிகிதமும் பெறப்பட்டு, அரசிற்கு வரும் மொத்த வருவாயில் 87 சதவிகிதம் வருவாயை ஈட்டித் தரும் பெருமைமிகு துறைகளாக வணிக வரித் துறை மற்றும் பதிவுத் துறை உள்ளன.

இதுவரை இல்லாத அளவு இது என்று வாய் வார்த்தையாக நான் சொல்லவில்லை. புள்ளிவிபரங்களின் அடிப்படையில் தான் சொல்கிறேன்.

கடந்த 10 ஆண்டுகால அதிமுக ஆட்சிக் காலத்தில் வணிக வரித் துறை மொத்தமாக ஈட்டியுள்ள வரி வருவாய் 6 லட்சத்து 87 ஆயிரம் கோடி ரூபாய் ஆகும். ஆனால் முதலமைச்சர் அவர்கள் தலைமையிலான கழக அரசு பொறுப்பேற்ற பின்னர் கடந்த 4 ஆண்டுகளில் மட்டும் இதுவரை 5 லட்சத்து 8 ஆயிரம் கோடி ரூபாய் வருவாயை வணிக வரித் துறை ஈட்டியுள்ளது. கடந்த ஆட்சியில் 10 ஆண்டு காலத்தில் ஈட்டப்பட்ட மொத்த வரி வருவாயில் 74 சதவிகித வருவாயை கடந்த 4 ஆண்டுகளில் கழக அரசு வசூல் செய்து சாதனை படைத்துள்ளது.

மீதமுள்ள வருவாய் இடைவெளியைப் பூர்த்தி செய்யும் வகையில் வணிக வரித் துறை பல்வேறு நடவடிக்கைகளை முனைப்புடன் முன்னெடுத்துள்ளது. அதேபோன்று, பதிவுத் துறையில் கடந்த 10 ஆண்டுகால அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்தில் ஈட்டப்பட்ட மொத்த வருவாய் 88 ஆயிரத்து 844 கோடி ரூபாய் ஆகும். ஆனால், இந்த 4 ஆண்டு கால கழக அரசு ஆட்சியில் மட்டும் 72 ஆயிரத்து 4 கோடி ரூபாய் வருவாய் ஈட்டியுள்ளது. கடந்த 10 ஆண்டு கால அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் பதிவுத் துறையில் ஈட்டப்பட்ட மொத்த வருவாயைவிட கழக ஆட்சியின் 5 ஆண்டு காலத்தில் கூடுதல் வருவாய் ஈட்டுவதற்கு பதிவுத் துறையானது பல்வேறு சீர்திருத்த நடவடிக்கைகளை சிறப்பான முறையில் மேற்கொண்டு வருகிறது.

இங்கே உரையாற்றிய சட்டமன்ற உறுப்பினர் செ. சுந்தரராஜன், சங்கரி அவர்கள், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி காலத்தில், 2016-2017 ஆம் ஆண்டு முதல் 2020-2021 வரையிலான ஐந்து ஆண்டுகளில் 1 இலட்சத்து 20 ஆயிரத்து 455 ஆவணங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன. (குறுக்கீடு) ஐந்து வருடமா, பொறுங்கள். ஆனால், எங்களின் இந்த நான்கு ஆண்டு காலத்தில் மட்டுமே 1 இலட்சத்து 31 ஆயிரத்து 238 ஆவணங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்வதோடு, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி காலத்தில், 2016-2017 ஆம் ஆண்டு முதல் 2020-2021 வரையிலான ஐந்து ஆண்டுகால வருவாய் 48 ஆயிரத்து 872 கோடி ரூபாய் ஆகும். ஆனால், எங்களின் இந்த நான்கு ஆண்டு காலங்களில் மட்டும் 72 ஆயிரத்து 4 கோடி ரூபாய் ஆகும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

வணிக வரித் துறையில், கடந்த ஆட்சியில் பத்து ஆண்டுகளில் ஈட்டப்பட்ட மொத்த வருவாய், வரி வருவாயிலே 74% வருவாயை, கடந்த நான்கு ஆண்டுகளில் கழக அரசு வசூல் செய்து சாதனை படைத்துள்ளது. மீதமுள்ள வருவாய் இடைவெளியைப் பூர்த்தி செய்யும் வகையில் வணிக வரித் துறை பல்வேறு நடவடிக்கைகளை முனைப்புடன் முன்னெடுத்துள்ளது. அதைப்போன்று பதிவுத் துறையும் கடந்த பத்து ஆண்டு கால அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி காலத்தில் ஈட்டப்பட்ட மொத்த வருவாயைவிட கூடுதலாக வருவாய் ஈட்டுவதற்கு பதிவுத் துறையானது பல்வேறு சீர்திருத்த நடவடிக்கைகளை சிறப்பான முறையில் மேற்கொண்டு வருகிறது. இவ்வாறாக, கழக அரசு பொறுப்பேற்ற பின்னர் கடந்த 4 ஆண்டுகளில் வணிக வரித் துறையும், பதிவுத் துறையும் சேர்ந்து மொத்தமாக 5 இலட்சத்து 80 ஆயிரம்

## தமிழ்நாட்டில் உள்ள – வில்லங்கச் சான்றிதழ் வழங்கும் முறை உள்ளிட்ட பதிவுத் துறை நடைமுறைகளை பல மாநிலங்களும் பாராட்டிச் சென்றுள்ளன!

கோடி ரூபாய் வருவாயை ஈட்டி, வரலாற்றுச் சாதனை படைத்துள்ளன.

இவ்விரு துறைகளால் வசூலிக்கப்படும் இந்த வருவாயின் பங்களிப்பானது, தமிழ்நாடு அரசு புதுமையான பல திட்டங்களை செயல்படுத்தி, மாநிலத்தின் உட்கட்டமைப்பை மேம்படுத்தவும், மக்களின் வாழ்க்கைத்தரத்தை உயர்த்திடவும் ஆதாரமாக உள்ளது. வரலாற்றுச் சாதனையான இந்த வெற்றியை முதலமைச்சர் அவர்களுக்கு பெருமையோடு அர்ப்பணிக்கிறேன்.

### வணிக வரித் துறை.

முதலமைச்சர் அவர்கள் தலைமையிலான கழக அரசு பொறுப்பேற்கும்போது, 2020-2021 ஆம் ஆண்டில் இழப்பீட்டுத் தொகை இல்லாமல்



85 ஆயிரத்து 867 கோடி ரூபாயாக இருந்த வணிக வரித் துறையின் வரி வருவாய், துறையின் தொடர் முயற்சிகளால் 2024-2025 ஆம் நிதியாண்டில், 1 இலட்சத்து 38 ஆயிரத்து 120 கோடி ரூபாயாக உயர்ந்துள்ளது. இது 2020-2021 ஆம் ஆண்டை ஒப்பிடும்போது 52 ஆயிரத்து 252 கோடி ரூபாய் கூடுதலாக வசூலிக்கப்பட்டுள்ளது.

### நுண்ணறிவுக் கோட்டங்கள்!

வரி வசூலில் முதன்மைத் துறையாக இருந்தபோதிலும் வணிக வரித் துறையின் நிர்வாக செலவினமா

## கொளத்தூர் – பொங்கலூர் – வண்டலூர் – சோழிங்கநல்லூர் – கேளம்பாக்கம் – நாவலூர்– கருத்தம்பட்டி ஆகிய 7 இடங்களில் பத்திரப் பதிவு அலுவலகங்கள் தொடங்கப்படும்!

னது, இத்துறையின் வருவாயில் அரை சதவிகிதத்திற்கும் குறைவாகவே தொடர்ந்து இருந்து வருகிறது என்பது குறிப்பிடத்தக்கது. தற்போது

2024-2025 ஆம் ஆண்டில் 0.47 சதவிகிதமாக உள்ளது. கழக அரசு பொறுப்பேற்ற பின்னர் வணிக வரித் துறையில் ஏழு நிர்வாக கோட்டங்களும், ஆறு நுண்ணறிவு கோட்டங்களும், 13 வணிக வரி துணை ஆணையர் அலுவலகங்களும் உருவாக்கப்பட்டது.

அதிக பணியாளர்களை துறையின் உயர் பணிகளில் ஈடுபடுத்தும் வகையில், 6 கூடுதல் ஆணையர்கள், 23 இணை ஆணையர்கள், 76 துணை ஆணையர்கள், 96 உதவி ஆணையர்கள், 296 மாநில வரி அலுவலர்கள் மற்றும் 975 துணை மாநில வரி அலுவலர்கள் ஆகியோருக்கு பதவி உயர்வு வழங்கப்பட்டுள்ளது. நுண்ணறிவுப் பிரிவில் சுற்றும் படைகளின் எண்ணிக்கை 55ல் இருந்து 100 ஆகவும், ஆய்வுக் குழுக்களின் எண்ணிக்கையை 52ல் இருந்து 112 ஆகவும் உயர்த்தப்பட்டது. இவ்வாறு துறையில் நான்காண்டுகளில் முன்னெடுக்கப்பட்டுள்ள பல்வேறு முயற்சிகளின் வாயிலாக இக்கூடுதல் வருவாய் வசூலிக்கப்பட்டுள்ளது. எனவே, மேற்குறிப்பிட்ட புதிய கோட்டங்களுக்கு தேவையான பணியாளர்கள், கட்டடங்கள், வாகன வசதி உள்ளிட்ட அடிப்படை உள்கட்டமைப்புகளை உருவாக்குவதற்கு, ஏற்கெனவே உள்ள கோட்டங்களில் பழமையான மற்றும் வாடகை கட்டடங்களில் செயல்படும் அலுவலகங்களுக்கு புதிய கட்டடங்கள் கட்டவும், பழைய கட்டடங்களில் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளவும், துறையின் வருவாய் பெருக்கத்திற்கு தேவையான மின்னணு சாதனங்கள் உள்ளிட்ட பணிகளுக்கும் இந்த நிதியாண்டில் வணிக வரித் துறைக்கு 350 கோடி ரூபாய் ஒதுக்கப்படும்.

பதிவுச் சான்று, திருப்புத்தொகை, வரி விவர அறிக்கைகள் தாக்கல் செய்வதை கண்காணித்தல், வரி விவர அறிக்கைகளின் கூர்ந்தாய்வு, வரி விதிப்பு மற்றும் வருவாய் நிலுவைகளை வசூல் செய்தல் போன்ற முக்கிய பணிகளில் வணிக வரித் துறை அதிக கவனம் செலுத்தி வருகிறது.

### வரி ஆய்வுக் குழு!

நுண்ணறிவுப் பிரிவின் ஆய்வுக் குழுக்கள் மற்றும் சுற்றும்படைகளின் எண்ணிக்கையை அதிகரித்தல், புதியதாக வரி ஆய்வுக் குழு மற்றும் தணிக்கைக் குழுக்களை உருவாக்குதல், வரி வசூல் ஆய்வாளர்களின் பணித்தரம் உயர்த்துதல், தரவுபகுப்பாய்வு தீர்வு சேவைகளை வழங்குவதற்காக ஹைதராபாத்தில் உள்ள இந்திய தொழில்நுட்ப நிறுவனத்தை (IIT) ஈடுபடுத்துதல், புதியதாக பதிவு பெற்ற வரிசெலுத்துவோர்க்கு வரவேற்பு கடிதம் அனுப்புதல் மற்றும் தெருத் தணிக்கை மேற்கொள்ளுதல் போன்ற நல்ல பல திட்டங்களை திறம்பட செயல்படுத்தியதன் பயனாக வணிக வரித் துறையில் கூடுதல் வருவாய் ஈட்டப்பட்டது.

2024-25 ஆம் ஆண்டில், மொத்த சரக்குகள் மற்றும் சேவைகள் வரி (GST) வருவாய் வசூலில் தேசிய வளர்ச்சி விகிதம் 11.40 சதவிகிதமாக இருக்கும் நிலையில் தமிழ்நாட்டினுடைய வளர்ச்சி விகிதம் அதைவிட உயர்வாக 15.22 சதவிகிதமாகவும், ஒருங்கிணைந்த சரக்குகள் மற்றும் சேவைகள் வரி (IGST) வருவாய் வசூலில் தேசிய வளர்ச்சி விகிதம் 13.49 சதவிகிதமாக இருக்கும் நிலையில் தமிழ்நாட்டினுடைய வளர்ச்சி விகிதம் அதை விட உயர்வாக 19.33 சதவிகிதமாகவும், மொத்த மாநில சரக்குகள் மற்றும் சேவைகள் வரி (SGST) வருவாய் வசூலில், தேசிய வளர்ச்சி விகிதம் 9.60 சதவிகிதமாக இருக்கும் நிலையில் தமிழ்நாட்டின் வளர்ச்சி விகிதம் அதை விட உயர்வாக 12.75 சதவிகிதமாகவும் வளர்ச்சியடைந்துள்ளது மிகவும் உற்றுநோக்க வேண்டிய குறிப்பிடத்தக்க சாதனையாகும்.

### போலிப் பட்டியல் தயாரிப்போர்!

மேலும், 2024-25 ஆம் ஆண்டில், மாநில சரக்குகள் மற்றும் சேவைகள் வரிச் சட்டத்தின்கீழ் மாநில வரம்பிற்குள்ளான வரி செலுத்துவோர் தாக்கல் செய்துள்ள மாதாந்திர வரி விவர அறிக்கைகளில் செலுத்திய வரித்தொகை மட்டுமல்லாமல், மாநில சரக்குகள் மற்றும் சேவைகள் வரி மற்றும் ஒருங்கிணைந்த சரக்குகள் மற்றும் சேவைகள் வரித் தீர்வின் மூலம் 6,741.77 கோடி ரூபாய் கூடுதலாக ஈட்டப்பட்டு,11.87 சதவிகிதம் வருவாய் பங்களிக்கப்பட்டுள்ளது.

மாநிலத்திற்குச் சேர வேண்டிய ஒருங்கிணைந்த சரக்குகள் மற்றும் சேவைகள் வரித் தீர்வையை (IGST settlement) வரி ஆய்வுக் குழு கண்காணிக்கிறது. இந்தக்குழு மேற்கொண்ட ஒருங்கிணைந்த சரக்குகள் மற்றும் சேவைகள் வரித் தீர்வின் பகுப்பாய்வு வாயிலாக, 2024-2025 ஆம் ஆண்டில் ஒருங்கிணைந்த சரக்குகள் மற்றும் சேவைகள் வரித் தீர்வு அதிகரித்து நமது மாநிலத்திற்கு 4,036.85 கோடி ரூபாய் கூடுதலாக வருவாய் கிடைத்துள்ளது.

### பகுப்பாய்வு தீர்வு சேவைகள்!

வணிக வரித் துறைமூலம் கூடுதலாக வருவாய் ஈட்டவும், வருவாய் வளர்ச்சியை மேம்படுத்தவும், வருவாய் இழப்பினை ஆய்வு செய்யவும், ஐதராபாத்தில் உள்ள இந்திய தொழில்நுட்ப நிறுவனத்தின் பெரும்தரவுகளின் பகுப்பாய்வு தீர்வு சேவைகளை 7-12-2023 முதல் மூன்றாண்டுகளுக்கு வணிக வரித் துறை பயன்படுத்துவதற்காக ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தம் (MoU) மேற்கொள்ளப்பட்டு, பயன்பாட்டு சேவை வழங்குநராக 13.47 கோடி ரூபாய் செலவில் அந்நிறுவனம் நியமிக்கப்பட்டுள்ளது. இதன் வாயிலாக, 2018-2019, 2019 2020, 2020-2021 ஆகிய வரி விதிப்பு ஆண்டுகளுக்கான வரி விவர அறிக்கைகள், சரக்குகள் மற்றும் சேவைகள் வரிச் சட்டங்களின்கீழ் கூர்ந்தாய்வு செய்யப்பட்டு 31-12-2023 முதல் 31-3-2025 வரையிலான 15 மாத காலத்தில் 4,809.46 கோடி ரூபாய் வருவாய் வசூலிக்கப்பட்டுள்ளது.

நுண்ணறிவுப் பிரிவின் ஆய்வு நடைமுறைகளில் அதிக கவனம் செலுத்தியதன் விளைவாக, 2023-24 ஆம் ஆண்டில் வசூலிக்கப்பட்ட 1,095.93 கோடி ரூபாயுடன் ஒப்பிடுகையில் 2024-25 ஆம் ஆண்டில் ஆய்வுக் குழுக்களினால் வசூலிக்கப்பட்ட வருவாயானது 2,867.83 கோடி ரூபாயாக உயர்ந்துள்ளது. சரக்குகள் வழங்காமல், விலைப்பட்டியல் மட்டும் வழங்கிய போலி பட்டியல் தயாரிப்போர் அடையாளம் காணப்பட்டு, அவர்களுக்கெதிராக நடவடிக்கைகள் தொடரப்பட்டு வருகிறது. போலிபட்டியல் தயாரிப்பவர்களுக்கு எதிராக 2024-25 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட மாநிலம் தழுவிய மற்றும் நாடு தழுவிய கணக்கெடுப்பின்போது 3,014.18 கோடி ரூபாய் உள்ளீட்டு வரி வரவு கொண்ட 1,430 பதிவு பெற்ற நபர்கள் முகவரியில் செயல்படாதவர்களாக, அண்ணன் செ. சுந்தரராஜன், இதை கவனியுங்கள். 1,430 பதிவு பெற்ற நபர்கள் முகவரியில் செயல்படாதவர்களாக கண்டறியப்பட்டு, 1,075 போலி வணிகர்களின் பதிவுச்சான்று இரத்து செய்யப்பட்டும், 2,837.50 கோடி ரூபாய் அபராதத் தொகை விதிக்கப்பட்டும் மேல் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. போலியான ஜி.எஸ்.டி. யினால் இவ்வளவு இழப்பு ஏற்பட்டிருக்கிறது என்பதை அண்ணன் தெரிந்துகொள்ள வேண்டும். அதற்காகச் சொல்கிறேன். மேலும், 12.46 கோடி ரூபாய் அளவிலான உள்ளீட்டு வரிவரவினை மோசடியாக பெற்ற இரண்டு நபர்கள் கைது செய்யப்பட்டு நீதிமன்றக் காவலில் வைக்கப்பட்டனர்.

சரக்கு வாகனச்சோதனை மற்றும் மின்னணு வழிப்பட்டியல் சரிபார்ப்புக்காக, சுற்றும்படை அலுவலர்களுக்கு வாகனங்கள் மற்றும் தேவையான உபகரணங்களை அளித்ததன் விளைவாக, கழக அரசு பொறுப்பேற்ற போது 2020-21 ஆம் ஆண்டில், அண்ணன், சுற்றும்படை 11.69 கோடி ரூபாயாக இருந்த சுற்றும்படையின் வருவாய், 2021-22 ஆம் ஆண்டில் 73.22 கோடி ரூபாயாகவும், 2022-23 ஆம் ஆண்டில் 222.49 கோடி ரூபாயாகவும், 2023-24 ஆம் ஆண்டில் 238.94 கோடி ரூபாயாகவும், 2024-25 ஆம் ஆண்டில் 251.98 கோடி ரூபாயாகவும் உயர்ந்தது. அந்த ஆட்சியில் 11.69 கோடி ரூபாயாக இருந்தது. இன்றைக்கு 786.63 கோடி ரூபாய் வருவாயை ஈட்டியுள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) சரக்குகள் மற்றும் சேவைகள் வரிச்சட்டங்கள் மற்றும் முந்தைய வரிச் சட்டங்களின்கீழ் மேற்கொள்ளப்படும் தணிக்கை நடவடிக்கைகளில் கூடுதல் கவனம் செலுத்தி 60 தணிக்கை குழுக்கள் பணியாற்றி வருகின்றன. இத்தணிக்கைக் குழுக்களின் மேம்படுத்தப்பட்ட பணித்திறனின்

தொடர்ச்சி 5 ஆம் பக்கம்